# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை,** தேனாம்பேட்டை, சென்னை–18.
தொலைபேசி 24357580

வழக்கு எண்.25005/விசாரணை/ 2009,

விசாரணை நாள் = 29–1–2010 (இராமநாதபுரம்)

முன்னிலை = முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி,
எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர் = திரு ஜே, கணேசன், த/பெ (லேட்) ஜங்கமன்,
5/103, வடக்கு பாரஸ்ட் ரோடு,
வடகரை, பெரியகுளம், தேனி மாவட்டம்

பொது அதிகார அமைப்பு = பொதுத் தகவல் அலுவலர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(மதுரை) லிமிடெட், கோட்டம்–4
மதுரை –625 010

========

இன்று (29.1.2010) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு ஜே. கணேசன் வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில் மதுரை மண்டலம், கோட்டம்.1, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் பொதுத் தகவல் அலுவலரும், துணை மேலாளருமான திரு எஸ். ராமமூர்த்தி, மற்றும் திண்டுக்கல் கோட்ட துணை மேலாளர் திரு பி. கோவிந்தராம் ஆகியோர் வந்திருந்தனர்.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் சட்டப் பிரிவு 6(1)ன் கீழ், மனுதாரர் 28.10.2008 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை, பொதுத் தகவல் அலுவலருக்கு இரு இனங்களுக்குத் தகவல் வேண்டி விண்ணப்பித்திருந்தார். சட்டப் பிரிவு 19(1)ன் கீழ் மனுதாரர் முதல் மேல்முறையீடு செய்யாமல், 16.12.2008 மற்றும் 20.2.2009 ஆகிய நாட்களில், சட்டப் பிரிவு 19(3)ன் கீழ் இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில், மனுதாரர் கோரிய தகவல்களை வழங்குமாறு ஆணையம் 10.7.2009 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டது. தான் கோரிய தகவல்கள் கிடைக்கவில்லையென்று, மனுதாரர் மீண்டும், 6.10.2009 அன்று இவ்வாணையத்திற்கு மீண்டும் முறையீடு செய்ததன்

அடிபபடையில், சட்டப் பிரிவு 18(3)ன் கீழ் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் வரவில்லை. விசாரணைக்கு வந்திருந்த பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை 28.7.2009 அன்று வழங்கியதாகத் தெரிவித்து, மனுதாரருக்கு அளிக்கப்பட்ட தகவல்களின் நகலையும், மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொண்ட ஒப்புதல் அட்டையின் நகலையும், இவ்வாணையத்தின் முன் சமர்ப்பித்தார். விசாரணைக்கு மனுதாரர் வராத நிலையில், அவருக்கு தகவல் வழங்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், இதுகுறித்து மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லையென்று கருதி, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

மாநில தகவல் ஆணையம்

ஒப்புதல் பெறப்பட்ட
நாள் 11 பிப்ரவரி, 2010.

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.25005/2009**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட்,**
**கோட்டம்–4, மதுரை–625 010**

**பெறுநர்**
**திரு ஜே, கணேசன், த/பெ (லேட்) ஜங்கமன்,**
**5/103, வடக்கு பாரஸ்ட் ரோடு,**
**வடகரை, பெரியகுளம், தேனி மாவட்டம்**